# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1715/12 - 2011 ජූලි 20 වැනි බදාදා - 2011.07.20

*1715/12 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.- பீ. 8/2007*

### 2007ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டம்

*2007 ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரச் சபைச் சட்டத்தின் 36 ஆம் பிரிவுடனும் 38 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 67 ஆம் பிரிவின்கீழ் மின்வலு, சக்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

பாட்டலி சம்பிக்க ரணவக்க,
மின்வலு, சக்தி அமைச்சர்.

கொழும்பு,
*2011, யூலை 13.*

**ஒழுங்குவிதிகள்**

*1.* இந்த ஒழுங்குவிதிகள் 2011 ஆம் ஆண்டின் வலு முகாமையாளர் மற்றும் வலு மதிப்பீட்டாய்வாளர் ஒழுங்குவிதிகள் என அழைக்கப்படலாம்.

**வலு முகாமையாளர்கள்**

2. பின்வரும் தகைமைகளை உடைய ஆள் ஒருவர் 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் (இதனகத்துப்பின்னர் ''அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தகைமை வாய்ந்த வலு முகாமையாளர் ஒருவராக நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(அ) உயர் கல்வி நிறுவனமொன்றின் பொறியியலில், விஞ்ஞானத்தில், கணக்கியலில், வியாபார முகாமைத்துவத்தில் அல்லது வர்த்தகத்தில் பட்டம் பெற்றவருமான பட்டதாரியும் மற்றும் குறித்த கற்கைத் துறையில் ஒரு வருட கால சேவை அனுபவத்தை உடையவரும் அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் கல்வி நிறுவனத்தின் பொறியியலில், விஞ்ஞானத்தில், கணக்கியலில், வியாபார முகாமைத்துவத்தில் அல்லது வர்த்தகத்தில் திப்ளோமா பட்டத்தைக் கொண்டுள்ளவரும் மற்றும் குறித்த கற்கைத் துறையில் இரண்டு வருட கால சேவை அனுபவத்தை உடையவரும்.

*3.* வலு முகாமையாளரொருவராக நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராகவுள்ள ஆள் ஒவ்வொருவரும் அவர் அவ்வாறு விரும்புமிடத்து வலு முகாமையாளரொருவராக நியமிக்கப்படுவதற்காகவும் மற்றும் வலு முகாமையாளரொருவராக ஒத்திசைவுச் சான்றிதழொன்று வழங்கப்படுவதற்காகவும் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட முகாமைச் சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டியவாறான அத்தகைய முறையில், அது சார்பாக விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்கலாம்.

4. ஒழுங்குவிதி 3 இன் நியதிகளின்படி வழங்கப்பட்ட ஒவ்வொரு ஒத்திசைவுச் சான்றிதழும் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை 'அ' இல் குறித்துரைக்கப்பட்டவாறான படிவத்திலிருத்தல் வேண்டும்.

**வலுக் கணக்காய்வாளர்கள்**

5. பின்வரும் தகைமைகளை உடைய ஆள் ஒருவர் 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் இலங்கை நிலைபெறுதகு அதிகாரசபையின் தகைமைவாய்ந்த வலுக் கணக்காய்வாளர் ஒருவராக நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(அ) உயர் கல்வி நிறுவனமொன்றின் பொறியியல் பட்டத்தை (பீ.எஸ்.சி பொறியியல்) அல்லது முகாமைத்துவ சபையால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அதையொத்த வேறு தகைமையைப் பெற்றவரும் மற்றும் வலு முகாமைத்துவத்துறையில் பத்து வருட கால சேவை அனுபவத்தை உடையவரும், அல்லது

(ஆ) உயர்கல்வி நிறுவனம் ஒன்றின் பொறியியலில் அல்லது விஞ்ஞானத்தில் பட்டத்தைப் பெற்றிருப்பதுடன் சக்தி முகாமைத்துவத்தில் அல்லது பொறியியலில் பட்டப்பின் திப்ளோமா அல்லது முதுமானிப் பட்டத்தைப் பெற்றவராகவும் இருத்தலும் மற்றும் வலு முகாமைத்துவத் துறையில் ஏழு வருட கால சேவை அனுபவத்தை உடையவரும்,

அத்துடன் அவர் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்டவொரு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட வலுக் கணக்காய்வு மீதான பரந்துபட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றைப் பூர்த்தி செய்தவராகவும் மற்றும் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட மட்டமொன்றிலான வலுக் கணக்காய்வுகளில் பத்திற்குக் (10) குறையாத வலுக் கணக்காய்வுகளில் சம்பந்தப்பட்டுள்ளவராகவும் இருத்தல்.

6. வலுக் கணக்காய்வாளரொருவராக நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவரான ஆள் ஒவ்வொருவரும், அவர் அவ்வாறு விரும்புமிடத்து, வலுக் கணக்காய்வாளரொருவராக நியமிக்கப்படுவதற்காகவும் மற்றும் வலுக் கணக்காய்வாளரொருவருக்கான ஒத்திசைவுச் சான்றிதழொன்று வழங்கப்படுவதற்காகவும், சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட முகாமைச் சபையினால் தீர்மானிக்கப்படவேண்டியவாறான அத்தகைய முறையில், அது சார்பாக விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்கலாம்.

7. ஒழுங்குவிதி 6 இன் நியதிகளின்படி வழங்கப்பட்ட ஒவ்வொரு ஒத்திசைவுச் சான்றிதழும் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை 'ஆ' இல் குறித்துரைக்கப்பட்டவாறான படிவத்திலிருத்தல் வேண்டும்.

8. சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட முகாமைச்சபையானது, அதனால் தீர்மானிக்கப்படவேண்டியவாறான அத்தகைய படிவத்தில், விடயத்திற்கேற்ப, வலு முகாமையாளர்களாக அல்லது வலுக் கணக்காய்வாளர்களாக நியமிக்கப்பட்டவர்களினதும் மற்றும் முகாமையாளர்களாக அல்லது வலுக் கணக்காய்வாளர்களாக ஒத்திசைவுச் சான்றிதழ் வழங்கப்பட்டவர்களினதும் பெயர்கள் பதியப்படவேண்டியதான, இடாப்பொன்றைப் பேணிவருதல் அல்லது பேணிவரச் செய்வித்தல் வேண்டும்.

9. ஒவ்வொரு வலு முகாமையாளரும் மற்றும் வலுக் கணக்காய்வாளரும் அவருக்கு ஒத்திசைவுச் சான்றிதழொன்று வழங்கப்பட்டதன் விளைவாக, அதிகாரசபையினால் காலத்திற்குக் காலம் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளுக்குத் தோற்றுதல் வேண்டுமென்பதுடன், ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் ஒருமுறை அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படவேண்டியவாறான அத்தகைய படிவத்திலான செயற்பாட்டு மீளாய்வுகளை அதிகாரசபைக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

10. ஒவ்வொரு வலு முகாமையாளரும் மற்றும் வலுக் கணக்காய்வாளரும் அவருக்கு ஒத்திசைவுச் சான்றிதழொன்று வழங்கப்பட்டதன் விளைவாக, ஒவ்வொரு மூன்று வருடங்களில் ஆகக்குறைந்தது ஒரு தடவையாவது வலு முகாமைத்துவம் பற்றிய தீவிரமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றில் அல்லது அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வேறு ஏதேனும் தொடர்புபட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் உள்ளடங்கலாக, அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு மட்டத்தில் உயர்தொழில்சார் அபிவிருத்தி பற்றிய முறையான பயிற்சியில் பங்குபற்றுமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

11. இந்த ஒழுங்குவிதிகளில்:-

''அதிகாரசபை'' என்பது, 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை என்று பொருளாகும் ; அத்துடன்

''உயர் கல்வி நிறுவனம்'' என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறான அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அத்துடன்

***அட்டவணை அ***

*( ஒழுங்குவிதி 4)*

**2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க,**
**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டம்**

*(வலு முகாமையாளர்) ஒத்திசைவுச் சான்றிதழ்*

*சான்றிதழ் இல.:* .............

*2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட, 2011 ஆம் ஆண்டின் வலு முகாமையாளர் மற்றும் வலுக் கணக்காய்வாளர் ஒழுங்குவிதிகளின் 2 ஆம் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்ட தகைமைகளைத் திருப்தி செய்தவரான*

...............................................................................................
*அவர்களுக்கு*

*இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது.*

*பணிப்பாளர் தலைமையதிபதி,*
*இலங்கை நிலைபெறுதகு வலு*
*அதிகாரசபை.*

*திகதி:* ...............................

*(இந்தச் சான்றிதழானது, சான்றிதழின் பின்புறத்தில் அச்சிடப்பட்டுள்ள நியதி நிபந்தனைகளுடன் இணைந்ததாக வாசிக்கப்படுதல் வேண்டும்)*

**ஏற்புடைத்தான நியதி நிபந்தனைகள்**

ஒத்திசைவுபெற்ற வலு முகாமையாளர் அவரை வேலைக்கமர்த்திய நுகர்வுத்தரப்பினால் நியாயமான வலுப் பயன்பாடு செய்யப்படுதலை மேம்படுத்துவதற்கும் வழிகாட்டுவதற்கும் மற்றும் குறிப்பாக பின்வருவனவற்றைச் செய்வதற்கும் பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும்.

(அ) வலு ஆகுசெலவைச் குறைக்கும் நோக்குடன் நுகர்வுத் தரப்பின் நாளாந்தச் செயற்பாடுகளைக் கண்கானித்து அத்தகைய நுகர்வுத் தரப்பினது முழுமொத்த வலு நுகர்வு தொடர்பில் பதிவுகளைப் பேணுதல்;

(ஆ) அனைத்து செயற்பாட்டு மட்டங்களிலும், வலு வினைத்திறனுடன் தொடர்புடைய நுகர்வுத் தரப்பு ஊழியர்களுக்கான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதுல்;

(இ) நுகர்வுத் தரப்புக்குக் கிடைக்கக்கூடிய வலுவைச் சேமிக்கும் வாய்ப்புக்களைக் கண்டறியும் பொருட்டு காலத்திற்குக்காலம் தகுதிவாய்ந்த வலுக் கணக்காய்வாளர் ஒருவரின் சேவையைப் பெற்றுக்கொள்ளுதல் ;

(ஈ) வலு வினைத்திறன் வாய்ந்த உபகரணங்களின் கொள்வனவு தொடர்பில் வலு நுகர்வுத் தரப்புக்கு மதியுரை வழங்குதல்;

(உ) நுகர்வுத் தரப்பினால் நிறுவப்பட்ட ஏதேனும் புதிய நிர்மாணங்கள் வலு வினைத்திறன் கட்டிடங்களுக்கான செயன்முறைக் கோவைக்கு இணங்கியொழுகியதாக அமைகின்றனவா என்பதை உறுதி செய்துகொள்ளுதல்;

(ஊ) நுகர்வுத் தரப்பினாலான வலு நுகர்வு மீதான வருடாந்த அறிக்கைகளைத் தயாரித்தல்;

(எ) இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நுகர்வுத் தரப்பின் வலு வினைத்திறன் சீராக்கல் திட்டத்தைத் தயாரித்தல்;

(ஏ) குறித்துரைக்கப்பட்ட கால வரையறைகளினுள் வருடாந்த வலு முகாமைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் நுகர்வுத் தரப்புக்கு உதவுதல்;

(ஐ) புதிய வலு முகாமைத்துவத் தொழில்நுட்பங்களில் காலத்திற்கேற்றவாறு முன்னேற்றங்களை அடைதல்;

(ஒ) மாதாந்த மற்றும் காலாண்டு ரீதியான வலு நுகர்வு பற்றிய அறிக்கைகளை நுகர்வுத் தரப்பின் முகாமைத்துவத்திற்குச் சமர்ப்பித்தல்;

(ஓ) அதிகாரசபைக்கும் மற்றும் நுகர்வுத் தரப்பிற்குமிடையிலான அனைத்துத் தொடர்பாடல்களுக்கும் பொறுப்பாக இருத்தல்; அத்துடன்

(ஔ) அவர்/அவள் எந்த நுகர்வுத் தரப்பிற்காக வேலை செய்கின்றாரோ/செய்கின்றாளோ, அந்த நுகர்வுத் தரப்புத் தொடர்பிலான வலுநுகர்வு பற்றிய அறிக்கைகளை ஆண்டுதோறும், 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் 36(2) (ஆ) என்னும் பிரிவின்கீழ் அதிகாரசபையினால் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் சமர்ப்பித்தல்.

**அட்டவணை ஆ**

( ஒழுங்குவிதி 7 )

**2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க,**
**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டம்**

*(வலுக் கணக்காய்வாளர்) சான்றிதழ்*

*சான்றிதழ் இல. ..............*

*2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட, 2011 ஆம் ஆண்டின் வலு முகாமையாளர் மற்றும் வலுக் கணக்காய்வாளர் ஒழுங்குவிதிகளின் 5 ஆம் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்டுள்ள தகைமைகளைத் திருப்தி செய்துள்ளவரான*

.............................................................................................
*அவர்களுக்கு*

*இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது.*

*பணிப்பாளர் தலைமையதிபதி,*
*இலங்கை நிலைபெறுதகு வலு*
*அதிகாரசபை.*

*திகதி : ................................*

*8-93*